Bishop George Rajendran sdb
Diocese of Thuckalay
ஆயர் சுற்றுமடல்
"With God all things are possible"
Bishop's House, P B No: 12,Thuckalay PO, Kanya kumari Dt- 629 175, Tamil Nadu, India

**Circular letter No/GR/42/2022**

# ஆயர் சுற்றுமடல்

**ஈசோ மெசியாவில் அன்பிற்குரிய அருட்தந்தையரே! அருட்சகோதரிகளே! அன்பு இறைமக்களே! நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும், ஆண்டவராம் ஈசோ மெசியாவிடமிருந்தும் அமைதியும் அருளும் உரித்தாகுக!**

## கன்னியாகுமரி சமூக சேவை பொன் விழா

இறை இயேசுவில் அன்பிற்குரியவர்களே,

தக்கலை மறைமாவட்டத்தின் சமூக பணிகளை முன்னெடுக்கும் நிறுவனமான கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் ஆரம்பிக்கப்பட்டு ஐம்பது ஆண்டுகள் நிறைவு பெறுகிறது. 1972-ஆம் ஆண்டு துவங்கப்பட்ட இச்சங்கம் கடந்து வந்த 50 ஆண்டு காலத்தை நினைத்து இறைவனுக்கு நன்றி செலுத்துவோம். ஐம்பது ஆண்டுகளில் இந்த நிறுவனத்தின் வழியாக ஏராளமான தொண்டு பணிகள் செய்ய இறைவன் அருள் கூர்ந்தார். மகளிர் மேம்பாடு, கல்விப்பணி, நலவாழ்வு, குடும்ப முன்னேற்றம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, சுயதொழில் பயிற்சிகள், விழிப்புணர்வு நிகழ்வுகள் போன்ற பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வரும் இச்சங்கத்தின் வாயிலாக நமது மாவட்டத்தில் பலர் பயன்பெற்று வருகிறார்கள்.

ஆலயத்தில் தரிசிக்கும் ஆண்டவரை அயலானில் காண்பது தான் உண்மையான கிறிஸ்தவ வாழ்வு. இதுவே கிறிஸ்து நமக்கு கற்றுத்தந்த போதனை. “இச்சின்னஞ்சிறிய ஒருவருக்கு நீங்கள் செய்ததை எல்லாம் எனக்கே செய்தீர்கள்” என்ற விவிலிய கூற்றுக்கு வாழ்வு கொடுத்து வரும் நம்முடைய மறைமாவட்ட சமூக சேவை நிறுவனம் கடந்த 50 ஆண்டுகளாக பல நற்பணிகள் செய்து வந்துள்ளது.

எல்லாரும் எல்லாமும் பெற்று இன்புற்று வாழ்தலைத்தான் நம் தமிழ் மரபும் வலியுறுத்துகிறது. இதையே அறவாழ்வு என்கிறோம். தொடக்ககால கிறித்தவர்களின் வாழ்க்கை முறையும் அவ்வாறே அமைந்திருந்தது. அவர்களுக்கு எல்லாம் பொதுவாக இருந்தது. எவ்வித ஏற்றத் தாழ்வுகளும் இல்லை. அனைவரும் சரிசமமாக நடத்தப்பட்டார்கள். புனித ஜாண் கிறிஸோஷ்டம் தன் போதனைகளில் பரிவன்பு கலந்த பகிர்வு, ஏழைகளின் தோழமையில் வாழ்வது, மனித மாண்பினை மதித்து நீதியுடன் அன்பு பணியாற்றுவது திருஅவையின் இலக்காக இருக்க வேண்டும் என்று உரைத்துள்ளார். ஆகவே சமத்துவமும்

சகோதரத்துவமும் கிறிஸ்தவ வாழ்வுக்கு இன்றியமையாதவை என்னும் சமூக பார்வையை எப்போதும் திருஅவை எடுத்துரைக்கிறது. சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் அடிப்படையாகக் கொண்டு மனித மாண்பினை மதித்து சாதி, மத ,இன வேறுபாடின்றி அனைவரையும் கடவுளின் பிள்ளைகளாக எண்ணி கடந்த ஐம்பது ஆண்டுகளாக கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் சிறப்பாக பணியாற்றி வருகிறது. இவ்வாறு கிறிஸ்துவின் வாழ்வியல் விழுமியங்களை குமரி மண்ணில் விதைத்துக் கொண்டிருக்கும் இச்சங்கம் தொடக்ககாலத்தில் சங்கனாச்சேரி உயர்மறைமாவட்டத்தின் குமரி திருத்தூது பணிகளுக்கும் முதுகெலும்பாக இருந்தது. இன்றும் மக்களின் ஆன்மீக வளர்ச்சியோடு இணைந்து சமூக பொருளாதார நிலைகளின் உயர்வுக்காக உழைத்து வரும் KKSSS நிறுவனத்தை இத்தனை ஆண்டுகளாக வழிநடத்தி வரும் அனைத்து அருட்தந்தையர்களையும் அருட்சகோதரிகள் பணியாளர்கள் மற்றும் நன்கொடை அளித்து உதவும் நல்லுள்ளம் படைத்த அனைவரையும் நன்றியோடு நினைத்து பாராட்டுகின்றேன்.

பொன்விழா நிறைவுக் கொண்டாட்டம் வருகின்ற டிசம்பர் மாதம் 5ஆம் நாள் கல்லுவிளை ஆசீர் அரங்கில் காலை 10 மணியளவில் நடைபெறுகிறது. இவ்விழா சிறப்புற வாழ்த்துவதோடு அனைவரது செப உதவியையும் நாடுகின்றேன்.

இரண்டாவதாக நமது மறை மாவட்டத்தில் செயல்படும் புனித வின்சென்ட் தே பவுல் சபை தக்கலை மத்திய பேரவையின் வெள்ளி விழா இவ்வாண்டு பல்வேறு செயல் திட்டங்களோடு சிறப்பாக கொண்டாடப்பட்டு வருவதை நீங்கள் அறிவீர்கள். அதன் நிறைவு விழா டிசம்பர் 11 ஆம் நாள் ஆசாரிபள்ளத்தில் நடைபெறுகிறது. வெள்ளி விழா நினைவுத் திட்டமான விடியல் அருள் அவை நடுவம் (VAAN) கட்டிட திறப்பு விழாவும் அன்றைய தினம் நடைபெறுகிறது. இந்நிகழ்வுகளில் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக புனித வின்சென்ட் தே பவுல் சபை உறுப்பினர்கள் கட்டாயம் அனைத்து நிகழ்வுகளிலும் கலந்து கொள்ள வேண்டும். பங்கேற்க இயலாதவர்கள் அதன் வெற்றிக்காக செபிக்கவும் கேட்டுக்கொள்கிறேன்.

மறைமாவட்டத்தின் இரு கரங்களாக விளங்கும் இந்த இரண்டு சமூக சேவை அமைப்புகளும் சிறப்புற செயல்பட வாழ்த்துகின்றேன். இறையாட்சி பணியில் இன்னும் உத்வேகத்தோடு செயல்பட வேண்டிய அருளை எல்லாம் வல்ல இறைவன் வழங்க இறையருள் நாடி செபிக்கின்றேன். இறைவன் உங்கள் அனைவரையும் நிறைவாக ஆசீர்வதிப்பாராக!

என்றும் ஈசோ மெசியாவில்

ஆயர் இல்லம்
24.11.2022

BISHOP GEORGE RAJENDRAN sdb
Diocese of Thuckalay

✞ மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB
தக்கலை மறைமாவட்ட ஆயர்

---

குறிப்பு: 1. இச்சுற்றறிக்கையை 2022 நவம்பர் 27-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை எல்லாபங்குகளிலும் வாசிக்க வேண்டும்.